பதிவு எண் : M 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : மாசி 19 (2—3—68) சனி ★ வெளியூர் : மாசி 20 (3—3—68) ஞாயிறு [இதழ் : 217

புதிய உருவில் இந்தித் திணிப்பு

புதுடில்லி, மார்ச் 2—

மத்தியக் கல்வித் துறையின் இந்தி நெறியாளர் கழகம், அஞ்சல் மூலம் இந்தி மொழிப் பாடங்களை இந்தியர்களுக்கும், வெளி நாட்டார்களுக்கும் கற்றுக் கொடுக்கும் ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

இதற்கான பாடங்கள் கொண்ட பிரதியை மத்திய கல்வித் துறை துணை அமைச்சர் ஷேர் சிங் வெளியிட்டார்.

சட்டமன்றத்தில்..!

[போகாத நிருபர்]

பொருளாதாரத்தில், 'பொது நிதி பரிபாலனம்' (Public Finance) என்ற சிறப்புப் பாடமே உண்டு!

அரசாங்கம் பொதுமக்களிடமிருந்து எழுப்பும் கடன்கள் பற்றிய அடிப்படை விளக்கங்களை அப் பகுதியில் காணலாம்!

பொதுமக்களிடமிருந்து அரசு எழுப்பும் கடன்களை, வரிகளாகக் கருதுவதற்கோ, பேசுவதற்கோ எந்தப் புத்தகத்திலும் ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை!

ஆனால் அதனை நேற்றையதினம் சட்டமன்றத்தில் ஒரு காங்கிரசு உறுப்பினர் 'துணிந்து' செய்திருக்கிறார்!

"தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, இந்த ஆண்டில் பொதுமக்களிடமிருந்து கடன் பத்திரங்கள் (Government Promisery Note) மூலம் எழுப்பவிருக்கும் ரூ. 20 கோடி எதனைக் காட்டுகிறது" என்று கேட்டிருக்கிறார்—திரு. பொன்னப்ப நாடார்!

கடன் பத்திரங்களில் முதலீடு செய்வதற்கு எவ்விதக் கட்டாயமுமில்லை; வசதி படைத்த தனி நபர்கள்—இலாபநோக்குடன் நடைபெறும் அரசினர் இலாகாக்கள்—தனிப்பட்ட நிறுவனங்கள்—எல் ஐ.சி. போன்ற அமைப்புக்கள் ஆகியவை முதலீடு செய்வதற்காகத்தான் கடன் பத்திரங்கள்!

பொதுக் கடன் எழுப்புவதில் உள்ள அடிப்படைத் தத்துவமே—

1. வரிவிதிப்பைத் தவிர்க்க வேண்டும்;
2. பொதுப் பழக்கத்தில் உள்ள நாணய ஓட்டத்தினையும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டும்;
3. அரசு வசதி நிலைவந்தவுடன் கடன்களைத் திருப்பித் தரவேண்டும்;
4. முதலீடு செய்பவர்களுக்கு ஓரளவு நியாயமான வட்டி விகிதமும் கிட்டவேண்டும் என்பவைதான்!

இதில், 'வரி விதிப்பு' என்ற குணாதிசயம், எந்த நிலையிலும் இல்லை!

பழைய கடன்களைத் தருவதற்கு புதிய கடன்களை அரசு எழுப்பும் நிலை வரும்போதுதான்—'பொதுக் கடன்', விமாசனத்துக்கு ஆளாக நேரிடுமே தவிர, மற்றபடி இந்த முறை பாதகச் செயல் ஒன்றும் அல்ல—பாவகாரியமுமல்ல!

"தமிழக அரசு எழுப்பவிருக்கும் ரூ. 20 கோடி எதனைக் காட்டுகிறது?" எனக் கேட்டிருக்கும் பொன்னப்ப நாடார், அதற்கு முன்தினம் மொரார்ஜி தேசாய் வெளியிட்டிருக்கும் நிதிநிலை அறிக்கையில் உள்ள பின்வரும் புள்ளிவிவரத்தை இனியேனும் தெரிந்துகொள்ளட்டும் :—

இந்திய அரசின்

	உள்நாட்டுக் கடன் (கோடிக்கணக்கில்)	வெளிநாட்டுக் கடன் (கோடிக்கணக்கில்)
1968 மார்ச் 1-ம் நாள் முடிய	ரூ. 6,559.06	ரூ. 5,400.78
1969 மார்ச் 1-ல்	ரூ. 6,931.85	ரூ. 6,225.31
1967–68 வரை மொத்தமாக	ரூ. 11,959.84	
1968–69 வரை மொத்தமாக	ரூ. 13,157.16	

வரிகளாக வசூலிப்பது பொதுமக்களுக்குப் பலன்களாகத்தான் திருப்பிக் கிடைக்கும்; அதுவும் சில, மறைமுகமாக; ஆனால் பொதுக் கடன், வட்டியுடன் திரும்பி வரும்! காங்கிரசு உறுப்பினர் இனியாவது இந்த அடிப்படையினைப் புரிந்து கொள்ள வேண்டும்.

★

"நிதிநிலை அறிக்கையில் கழக அரசு, மத்திய அரசிடம், வெறும் 'கருணை மனு'க்கள்தான் போட்டிருக்கின்றது" என்று முதல் நாள் விவாதத்தில் கலந்துகொண்ட காங்கிரசு உறுப்பினர் திரு. மகாதேவன் குறிப்பிட்டிருக்கும்போது, நேற்றையத்தினம் பேசியிருக்கும் மற்றொரு காங்கிரசு உறுப்பினர் திரு. சிவசுப்பிரமணியம், 'பட்ஜெட்டில் பக்கத்துக்குப் பக்கம், மத்திய அரசின்மீது ஒரே தாக்குதல்களாக இருக்கிறதே' என்று புதுடில்லிக்காகப் பரிந்து பேசியிருப்பது, அவர்களது கட்சிக்குள்ளேயே இருக்கும் தெளிவினைக் காட்டுகிறது! இருவரது கருத்திலும் எவரது கருத்து சரி என்பதற்கு, 'அவர்களது கட்சியாவது துணைக்கு வரட்டும்' என விரும்புவோமாக!

★

'இந்தியன் ஏர் லைன்ஸ்'—'ஏர் இந்தியா' போன்ற நிறுவனங்கள், 'ஏன் நட்டத்தில் நடக்கின்றன' அல்லது, 'முதலீட்டுக்குச் சமமான இலாபம் கொடுப்பதில்லை' என்று கேட்கப்படும்போதெல்லாம் மத்திய அரசு, 'என்ன செய்வது? நட்டம் என்று தெரிந்தாலும், இலாபம் இல்லை என்று புரிந்தாலும், சில பல கடமைகளை அரசு ஆற்றித்தான் தீரவேண்டியிருக்கிறது; பெருமைக்காக சில—தேவைக்காக பல" எனப் பதில் அளித்திருக்கிறது!

அதே விவேகத்தை, புதுடில்லி, தமிழகத்தின் நான்கு இருப்புப் பாதைகள் துறையிலும் காட்டியிருக்குமானால், கழக உறுப்பினர் திரு. எஸ். இராமச்சந்திரன், நேற்றைய சட்டமன்றக் கூட்டத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றினைக் கொண்டுவந்திருக்கும் அவசியம் நேர்ந்திருக்காது!

'நட்டம்' என்ற ஏட்டுக் கணக்கினைக் காட்டி, மேட்டுப்பாளையம்—உதகை பாதை உள்ளிட்ட நான்கு இருப்புப் பாதைகளை இந்திய இரயில்வேத் துறை எடுகக நினைப்பதில் உள்ள சங்கடங்களை, பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் அறிக்கை தெளிவுபடுத்தியிருக்கிறது!

இந்தியாவிலேயே மூன்று தண்டவாள முறை உடைய ஒரே இருப்புப் பாதையான மேட்டுப்பாளையம்—உதகை மார்க்கத்தை எடுப்பது இருக்கிற தனிச் சிறப்பை அழிப்பதாகவும், உல்லாசப் பயணிகளுக்குப் பாதகமாகவும் இருப்பதை, எஸ். இராமச்சந்திரன் விளக்கியுள்ளார்!

உறுப்புகளை ஒரு பாரமாக உடல் கருதுவதில்லை! கார்டு விலையை ஏற்றப்போகும் மத்திய அரசு, கார்டு ஒன்றுக்கு இலாகாவின் நிர்வாகச் செலவு 10.13 காசு எனக் கணக்குக் காட்டிகிறது; இருந்தாலும், இதுவரையில் 6-காசுக்குத்தான் விற்று வந்தனர்; எனவே, இந்த நான்கு இருப்புப் பாதைகள் பற்றிப் புதுடில்லி இரண்டாவது முறை சிந்திப்பதற்கு நேற்றைய கவன ஈர்ப்புக் தீர்மானம் பயனளிக்கும்!

★

இரண்டாம் நாள் விவாதமான நேற்று, கழக உறுப்பினர்கள் ஒன்பதுபேர், நிதிநிலை அறிக்கைபற்றி கருத்துக்களை வழங்கியிருக்கின்றனர்!

படி அரிசித் திட்டம்பற்றி காங்கிரசுக்காரர்கள் எந்த அளவுக்கு 'அரசியல் முறுக்கு'க் கொடுக்கிறார்களோ—அந்த அளவுக்குக் கழக உறுப்பினர்களின் உரைகளிலும் விளக்கங்களும், பதில்களும் பளிச்சிடுகின்றன!

கொளத்தூர் கோதண்டம், எட்மண்ட் பர்னாண்டோ ஆகிய இருவரும் படி அரிசித் திட்டத்தின் அடிப்படை நோக்கம்பற்றித் தந்துள்ள விளக்கம், 'ஏன் இத்திட்டத்தை கிராமப்புறங்களுக்கு விரிவுபடுத்தவில்லை' என்ற காங்கிரசாரின் வினாக்களுக்குப் பதிலளிக்கிறது!

> "வெளி மார்க்கெட்டுகளில் அரிசி விலை குறைந்துவிட்டதென்றால், படி அரிசித் திட்டத்தை மேன்மேலும் பற்றிக்கொண்டு விடாப்பிடியாக இருக்கும் அளவுக்கு நான் விவரம் புரியாதவனல்ல"

என்று முதலமைச்சர் பல தடவைகளில் தந்துள்ள கருத்தின் மையப் புள்ளியை, மேற்கண்ட இரு உறுப்பினர்களும் உணர்ந்திருப்பதனை அவர்களது உரைகள் காட்டுகின்றன!

நியாயமான விலையில்—காங்கிரசு உறுப்பினர்களுக்குப் புரியும்படிக் கூறவேண்டுமானால், அவர்கள் நிர்வாகத்தின் கடைசி இரண்டு ஆண்டுகளில் விற்ற விலையைவிட—இப்போது அரிசி எளிதில் கிடைக்கும்போது, 'இத்திட்டத்தினைக் கிராமப்புறங்களுக்கு ஏன் விரிவுபடுத்தவில்லை' என்று கேட்பது, தேவையின் அடிப்படையில் அல்ல—அரசியல் அடிப்படையில் என்பதனை, கொளத்தூர் கோதண்டமும், பர்னாண்டோவும் விளக்கியிருக்கிறார்கள்!

★

காங்கிரசுக்காரர்களின் இந்த அரசியல் பார்வையினை அமைச்சர் சத்தியவாணிமுத்து இன்னும்

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழகத்திற்கு எதிராக சிவசேனை நடவடிக்கை

விவாதிக்கத் தமிழகச் சட்டமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரச்சினை

அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம் --- அவைத் தலைவர் தீர்ப்பு

சென்னை, மார்ச் 2—

" தகிழகத்தில் தயாரிக்கப்பட்ட 'ஆத்மி' என்னும் திரைப் படத்தை 'பம்பாயில் திரையிடக் கூடாது' என்று சிவசேனையைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததன் விளைவாக 'தமிழகத்தில் தயாரான இந்திப் படத்தைக் கூடக் காட்டக்கூடாது' என்று கூறும் அளவுக்கு—தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மராத்திய மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிறது; இதனால், தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தையும் கலக்கத்தையும் பற்றி விவாதிக்க வேண்டும்"

என்று கோரி, இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த வரதராசன் இன்று சட்டமன்றத்தில் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தார்.

அவர் தமது தீர்மானத்தை விளக்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தமிழகத்தில் சகஜநிலை உருவாகி, 'எல்லாத் தரப்பு மக்களும் தமிழகத்தில் சுமுகமாக வாழலாம்' என்ற நிலை ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்தில், பம்பாயில் மராத்தியர்கள் நடத்தும் சிவசேனை நடவடிக்கைகளை, மத்திய அரசு பார்த்தும் பார்க்காதது போல் இருப்பதால்தான் அந்த இயக்கம் வளருகிறது; இந்தப் பேரபாயத்தைக் குறித்து நாம் விவாதிக்க வேண்டும்."

அமைச்சர் மு. கருணாநிதி

இத்தீர்மானத்தின்மீது அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பின்வருமாறு கருத்தறிவித்தார் :—

"பம்பாயில் உள்ளவர்கள் ஒரு தமிழ்ப் படத்தைக்கூட அல்ல—இந்திப் படத்தை—அது, தமிழகத்தில் தயாரிக்கப்பட்டது என்பதற்காகத் தங்கள் இந்திப் பற்றையும் மறந்து—அதனைத் திரையிடக் கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள்; பம்பாயிலிருந்து திரும்பிய திரைப்பட அதிபர்களுடன் இன்று காலை நான் தொடர்பு கொண்டு பேசினேன். அங்கு, அந்தப் படத்தைக் காட்ட ஒரு வார காலத்தில் ஒரு நிபந்தனை விதித்து, 'அதை நிறைவேற்ற வேண்டும்' என்று கூறியிருப்பதாக அவர்கள் கூறினார்கள்.

"தமிழ்ப் படத்தைத் திரையிடக் கூடாது என்று பம்பாயிலும், கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த பெங்களூரிலும் நடைபெற்ற கிளர்ச்சிகள்தான், 'வேறு மொழிப் படங்களைத் தமிழகத்தில் திரையிடக் கூடாது' என்று இங்குள்ள மாணவர்களும் மற்றவர்களும் கிளர்ச்சி நடத்த வித்தாக அமைந்தன!

" இங்கு 'அப்படி வேற்றுமொழிப் படங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடாது' என்று அரசின் தரப்பிலும், அரசை நடத்துகின்ற தி. மு. கழகத்தின் சார்பிலும் பலமுறை அறிவிக்கப்பட்டிருக்கிறது.

" இப்போது பரவியுள்ள இத்[illegible] கைய உணர்ச்சி—கட்டுக்க[illegible] காத நிலையில், பம்பாயில்[illegible] ளவர்கள் நிபந்தனை [illegible] கூடிய நிலை உருவா[illegible]

இது, அந்த மாநில அரசு கவனிக்கவேண்டிய விவகாரம்.

" தமிழ்நாட்டில் இந்திப் படம் காட்ட அனுமதிக்க வேண்டும்—என்று அவர்கள் நிபந்தனை விதித்திருக்கிறார்கள். இந்த நிபந்தனையை விதிக்காததற்கு முன்பேகூட, நாம் இங்கே தெரிவித்திருக்கிறோம்—'இந்தி மொழி ஆதிக்கம் செலுத்தும் மொழியாக—ஆட்சிமொழியாக இங்கு வருவதைத்தான் நாம் எதிர்க்க வேண்டுமே தவிர, கலையுணர்ச்சியுடன்—மாநிலத்துக்கு மாநிலம் கலையுணர்வைப் பரிமாறிக் கொள்ளும் வகையில்–அவரவர் விரும்பிக் கட்டணம் செலுத்திப் படம் பார்ப்பதைத் தடை செய்யக்கூடாது' என்று கூறியிருக்கிறோம்.

" இன்று தமிழகத்தில் நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாணவர்களெல்லாம் மொழிக் கிளர்ச்சியைக் கைவிட்டு, கல்வி நிலையங்களுக்குத் திரும்பியுள்ளனர். மொழிப் பிரச்சினையைப் பெரியவர்களிடம் விட்டுவிடும் நல்ல முடிவினை எடுத்துள்ளார்கள்; எனவே, இங்கே இந்திப் படங்களுக்கு மாணவர்களால் எந்தத் தடையும் இருக்காது என நம்புகிறோம்.

" இங்குள்ள இந்திப் படம் வெளியிடுவோர், 'இந்திப் படங்களை வெளியிடப் பாதுகாப்புத் தர வேண்டும்' என்று கேட்டிருக்கிறார்கள்; அத்தகைய பாதுகாப்புக்கூடத் தேவையிராது. ஆனாலும், போலீசுப் பாதுகாப்புத் தர அரசு தயாராகவே உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அந்த மாநிலத்துக்குரிய இந்த விவகாரத்தை நாம் இங்கு விவாதிக்கத் தேவையில்லை எனக் கருதுகிறேன்."

துணை அவைத் தலைவர் தீர்ப்பு

" அமைச்[illegible] தின் [illegible] மன்[illegible] வி[illegible]

நம் நாடு
ஆசிரியர்: இரா.செழியன் [illegible]
திருவள்ளுவராண்டு 1999 மாசி 19 (2—3—68(சனி

தமிழக அரசின்

வரவு-செலவுத் திட்டம்

[1]

குசராத் மாநிலம் நீங்கலாக மற்ற மாநிலங்கள் அனைத்தும் பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்கியுள்ளன. புதிய வரிகளை விதித்தும், ஏற்கனவே விதிக்கப்பட்டிருக்கின்ற வரிக் கட்டணங்களை மிகைப்பட உயர்த்தியும்கூட, பற்றுக்குறை வரவு–செலவுத் திட்டத்தை இந்திய அரசு உருவாக்கியுள்ளது.

இந்த நிலையில், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அளித்திருக்கின்ற 1968-69-ம் ஆண்டுக்குரிய தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டம், உபரி வருமானத்தைக் கொண்டதாக அமைந்திருப்பது பாராட்டுதற்குரியதாகும். குறிக்கப்பட்டிருக்கின்ற உபரி வருமானம் ரூ. 74 இலட்சம் அளவுடையதாக இருந்தபோதிலும், புதிய வரிகளை விதிக்காமலும், உள்ள வரி விகிதங்களைக் கூட்டாமலும் குறைந்தபட்சமாகவாவது உபரியைக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

இவ்வாறு வரவு-செலவுத் திட்டத்தை உபரி வருமானமுடையதாக உருவாக்கியுள்ளதில், மற்ருெரு சிறப்பும் இருக்கிறது ; அதாவது, ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் ஏற்பாட்டிற்கு ரூ. 7.24 கோடியை உதவித் தொகையாகச் செலவழிக்கக்கூடிய நிலையிலும், இந்த உபரி வருமானத்தை உள்ளடக்கமாகக்கொண்ட வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்கியிருப்பது தனிச் சிறப்பு அல்லவா ?

இந்திய அரசாங்க ரிசர்வ் வங்கிக்குக் கொடுக்க வேண்டியிருந்த அதிகப் பற்றுத் தொகையை தமிழக அரசு நடைமுறை நிதி ஆண்டில் திரும்பச் செலுத்திவிட்டிருப்பதும் சிந்திக்கத்தக்கதாகும். இப்படி, ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்றுள்ள அதிகப் பற்றைத் திருப்பிக் கொடுக்கமுடியாமல், பல மாநில அரசுகள் இடர்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், தமிழக அரசு, தான் பெற்றிருந்த அதிகப் பற்றைத் திரும்பக் கொடுத்துவிட்டிருப்பது, கழக ஆட்சியின் தனித் திறமைக்கு தக்கதோர் சான்ருகும்.

இத்தொடர்பில் மற்ருென்றையும் இங்கு குறிப்பிட வேண்டும். ரிசர்வ் வங்கியிலிருந்து தாங்கள் பெற்றுள்ள கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக இந்திய அரசிடம் ரூ. 108 கோடி அளவுக்கு மாநிலங்கள் சிறப்பு உதவி பெற்றுள்ளன ; அத்தகைய உதவி எதையும் இந்திய அரசிடம் பெறுகின்ற நிலை இந்த மாநிலத்துக்கு ஏற்பட்டதில்லை.

'தமிழக அரசின் நிதிநிலை, உயர்ந்த நிலையில் இருந்துவருகிறது' என்ற உண்மையை, முதலமைச்சர் அண்ணா தந்துள்ள வரவு-செலவுத் திட்டம் உறுதிசெய்திருக்கிறது. கழக அரசின் நிர்வாகச் சிறப்புக்கும், இந்த வரவு-செலவுத் திட்டம் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

அரசு ஊழியர்களுக்கு அகவிலைப் படி, சென்ற ஆண்டு இறுதியில் உயர்த்தப்பட்டது ; அதன் விளைவாக, அடுத்த நிதி ஆண்டில் ரூ. 9.2 கோடி செலவாகும் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்திய அரசுக்குத் திருப்பித் தரவேண்டிய கடன் தொகையும், அதற்குரிய வட்டியும், ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே வருவதனுல், நிதித் துறையில் தமிழக அரசுக்கு ஏற்படக்கூடிய சுமையை, வரவு–செலவுத் திட்டம் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறது. இத்துடன், பொதுமக்களிடம் அரசு எழுப்பியுள்ள கடன் தொகையைத் திருப்பித் தரவேண்டிய அரசின் பொறுப்புப் பற்றியும், திட்டத்தில் விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

இந்திய அரசுக்குச் செலுத்தவேண்டிய கடன் தொகை—வட்டித் தொகை பற்றி நிதி நிலை அறிக்கையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்ருர் :—

" முதல் திட்டத்தின் தொடக்கத்திலே, 1950-ல் இந்திய அரசுக்குச் சொந்தமாகச் சேரவேண்டிய கடன் ரூ. 14 கோடியாக இருந்ததற்கு மாருக, மூன்ரும் திட்ட இறுதியில் ரூ. 270 கோடிக்குமேல் உயர்ந்திருந்தது ; அது இப்போது ரூ. 300-கோடிக்கு உயர்ந்துள்ளது."

இதற்குச் செலுத்தப்பட வேண்டிய வட்டித் தொகை குறித்து நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது :—

" மத்திய அரசிடமிருந்து பெறும் கடன்களுக்கு உரிய சராசரி வட்டிவீதம், 1955—56-ல் ஏறக்குறைய இரண்டரை சதவீதமாக இருந்ததற்கு மாருக, இப்போது நாலரை சதவீதத்திற்குமேல் போகிறது. இவை இரண்டின் விளைவாக இந்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய வட்டித் தொகை, 1950—51-ல் ஏறக்குறைய ரூ. 41 இலட்சமாக இருந்தது, 1968 69-ம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஏறத்தாழ ரூ. 15 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது."

[illegible] இந்திய அரசிடமிருந்து தாங்கள் பெற்றுள்ள [illegible], அதற்குரிய வட்டித் தொகையையும் உரிய [illegible]த்த இயலாமல் பல மாநிலங்கள் தடுமாறி [illegible] வெளிநாடுகளிடம் பெறுகின்ற கடன் [illegible]செய்யப்படுகின்ற வட்டி வீதத்தையும், [illegible]த் தந்துள்ள கடன் தொகைக்குக் [illegible]களையும் அறிந்துகொள்ள வேண் [illegible]ழுவைக் கேட்டிருப்பதாக ஆந் [illegible]யில் பேசியிருப்பது பொருள் [illegible]

[illegible]ல் தமிழக அரசு பெற் [illegible] மறையில் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விளக்கத்தையும் அறிஞர் அண்ணா அவர்கள் தமது நிதிநிலை அறிக்கையில் கீழ்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார்கள் :—

" கடனில் கணிசமான பகுதி நீர் வழங்குதல், புயல் அல்லது பஞ்சம் காரணமாக ஏற்பட்ட துயர் துடைத்தல் அல்லது பொற்கொல்லர்கள் துயர் துடைத்தல், அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் போன்ற நோக்கங்களுக்குச் செலவிடப்பட்டுள்ளன "

எனக் குறிப்பிட்டுவிட்டு,

" அத்தகைய கடன்கள், நியாயமாக மானியங்களாக மாற்றப்பட வேண்டியவை "

என்றும் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.

" வட்டிச் செலவுகள் ஒருபுறமிருக்க, 1968—69-ம் ஆண்டிற்குரிய வரவு–செலவுத் திட்டத்தை நடப்பு ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகைகள் மிகவும் அளித்துள்ளன.

" நடப்பு ஆண்டில் 20 கோடியே 30 இலட்சம் ரூபாய் திருப்பிச் செலுத்தவேண்டியிருப்பதற்கு மாருக, நாம் திருப்பிச் செலுத்தவேண்டிய தொகை—குறுகிய குறுகியகாலக் கடன்களை நீக்கிப் பார்த்தாலும்—ரூ. 7 கோடி கூடுதலாகி, மொத்தம் 27 கோடியே 30 இலட்சம் ரூபாம் அளவில் உள்ளது."

இதன் விளைவு என்ன ?

" அடுத்த ஆண்டில், திட்டத்திற்கான நமது நிதி வசதிகள் கரைவதற்குக் காரணமான முக்கிய கூறுகளில், இது ஒன்ருகும்."

இக்கடன்களைத் திருப்பிப் பெறுவதில், ஏற்றதோர் மாற்றத்தைச் செய்யவேண்டிய பொறுப்பு இந்திய அரசுக்கு உள்ளது. அப்பொறுப்பை, நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கின்ருர்கள் :—

" அடுத்த ஆண்டில் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு, ஏறக்குறைய நடப்பு ஆண்டில் இருக்கும் அளவிலேயே நிற்கும்வண்ணம், அடுத்த நிதியாண்டில் இந்திய அரசுக்குச் சேரவேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்தவேண்டிய கால அளவினை மாற்றியமைக்கும்படி இந்திய அரசினைக் கேட்டுள்ளோம். தொடக்கத்தில் மத்திய அரசு அளித்துள்ள பதில் சாதகமாக இல்லாதிருப்பினும்— நமது பக்கம் நியாயம் இருப்பதால்—இதனைத் தொடர்ந்து வற்புறுத்தவேண்டும் என மாநில அரசு விரும்புகிறது."

—கா. க.

நள்ளிரவு வரை அரசுப் பேருந்து

அமைச்சர் விளக்கம்

சென்னை, மார்ச் 1—

"சென்னை எழும்பூரிலிருந்து மயிலாப்பூருக்கு இரவு 10 மணிவரை அரசுப் பேருந்து விடும் எண்ணம் உண்டா ?"

என்று சட்டமன்றத்தில் காங்கிரசு உறுப்பினர் வை. சாமிநாதன் கேட்ட கேள்விக்கு, 'இரவு 10 மணிக்குப் பின்னும் அரசுப் பேருந்துகள் எழும்பூரிலிருந்து மயிலாப்பூருக்குச் செல்லுகின்றன' என்று அமைச்சர் மு. கருணாநிதி பதிலளித்தார்.

மேலும், பல்வேறு பாதைகளிலும் நள்ளிரவு வரை பேருந்துகள் விடப்படுவதையும் குறிப்பிட்டார்.

விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் இந்தி !

பெங்களூர், பிப். 26—

'தமிழ் வாழ்க ; இந்தி ஒழிக' என்ற சொற்கள் தமிழகத்திலிருந்து இங்கு வரும் மோட்டார் ஊர்திகளை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கின்றன !

'Down with Hindi' என்ற சொற்கள், 'மோட்டார் ஊர்திகளின் சொந்தக்காரர்கள், தங்கள் ஊர்தியின் கண்ணுடிகளை உடையாமல் பாதுகாக்க எவ்வளவு அக்கறையாக இருக்கின்ருர்கள்' என்பதைக் காட்டுகின்றன !

கன்னட எழுத்துக்களில் 'கன்னட பாளலி' ('கன்னடம் வாழ்க') என்று அச்சிட்ட துண்டறிக்கைகள் மைசூர்க்காரர்களின் அரைகுறை இந்தி எதிர்ப்பு உணர்ச்சியைப் பலப்படுத்திக்கொண்டிருந்தால், சொற்பிழைகள் மலிந்த நாகரி எழுத்துக்களுடன் சிவசேனைக்காரர்கள் பம்பாயில் ஒட்டிவரும் சுவரொட்

(4-ம் பக்கம் பார்க்க)

மன்ருடியார் பண்ணையில் மாடு வாங்கிய வகையில் ரூ. 60,000

முன்னுள் அரசு வாங்கிய காளைகள் — சட்டமன்றத்தில் சரமாரியான கேள்விகள்

சென்னை, மார்ச் 1 —

" கோவை மாவட்டம் பழையகோட்டை கால்நடைப் பண்ணையிலும், காங்கயம் கால்நடைப் பண்ணையிலும் அரசு காளைகள் வாங்குவது பற்றி 1966—67-ல் ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளவில்லை ; ஆனுல், 1962—63 முதல் 1966—67 வரை அந்தப் பண்ணைகளிலிருந்து ரூ. 60,000 மதிப்புக்குக் காளைகள் வாங்கப்பட்டிருக்கின்றன ; ஒரு காளை, ஏறக்குறைய ரூ. 1,000 விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது "

என்று சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் ஏ. எம். இராஜாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி தெரிவித்தார்.

பாலசுப்பிரமணியம் (ச. சோ.) :— "அந்தக் கால்நடைப் பண்ணை யாருக்குச் சொந்தமானது ?"

அமைச்சர் :— "அது யாருக்குச் சொந்தமானது என்று கனம் உறுப்பினருக்கே தெரியும். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னுள் அமைச்சர் மன்ருடியாருக்குச் சொந்தமானதுதான்."

கே. விநயகம் :— "இப்படி வாங்கப்பட்ட காளைகள், அமைச்சராலேயே நேரடியாக வாங்கப்படுவதில்லை—அதற்குரிய அதிகாரிகளால்தான் வாங்கப்படுகின்றன என்பதை அமைச்சர் அறிவாரா ?"

அமைச்சர் :— "திரு. விநயகம் அவர்கள், முன்பிருந்த அமைச்சரைக் காப்பாற்ற முனைகிருர் ; நான், முன்னுள் அமைச்சர் மன்ருடியார் பற்றி ஏதோ குறை சொன்னதாக நினைத்துக் கொண்டு அவர் இப்படிக் கேள்வி போடுகிருர் ; நான் அவரைப் பற்றி எதுவும் சொல்லவில்லை ; காளைகள் அவருடைய பண்ணையில் வாங்கப்பட்டதாகத்தான் சொன்னேன் ; கனம் விநயகம் கேட்ட கேள்வியினுல்தான் அப்படிப்பட்ட நினைவு வருகிறது."

கேள்வி :— "பழையகோட்டைக் கால்நடைப் பண்ணைக்குத் தனியாக மேய்ச்சல் காடுகள் உண்டா ?"

பதில் :— "என்னிடம் இப்போது விவரமான தகவல் இல்லை ; மன்ருடியாரின் உறவினர்களுக்குச் சொந்தமான மேய்ச்சல் காடுகள் உள்ளதாகக் கேள்விப்படுகிறேன்."

எஸ். இராமச்சந்திரன் :— "பழையக்கோட்டை பண்ணையில் காளை ஒன்றுக்கு ரூ. 1,000 கொடுத்து காளையை வாங்கி— ஆனுல் அதை இங்கு கொண்டு வராமல் அங்கேயே விட்டுவைத்திருந்ததாகவும், பல நாள் சென்று, 'அந்தக் காளை வேண்டாம் ; பணத்தைத் திருப்பிக் கொடுங்கள்' என்று கேட்டபோது, 'காளைக்கு வைக்கோல் தீனி போட்ட வகையில் அந்தப் பணம் செலவாகி விட்டது' என்று கூறிவிட்டதாகவும் சொல்லப்படுகிறதே—உண்மையா ?"

பதில் :— "அதுபற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை ; தனிக் கேள்வி போட்டால் விசாரித்துச் சொல்லலாம்."

மேலும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது :—

"பழையக்கோட்டைப் பண்ணை, மன்ருடியாருக்குச் சொந்தம் என்பதால், அதில் காளைகளை வாங்கக்கூடாது என்று சொல்லவில்லை ; அதிலும் வாங்கலாம்— மற்றப் பண்ணைகளிலும் வாங்கலாம் ; எங்கே மலிவாகவும் நல்ல காளையாகவும் இருக்கிறதோ அங்கு வாங்கலாம்."

காங்கிரசு உறுப்பினரி[illegible] முரண்பட்ட கேள்வி

சென்னை, மார்ச் 1—

இன்று சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது, 'மாவட்ட நிர்வாகத்தில் தமிழை ஆட்சிமொழியாக்குவது என்று அரசு எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?' என்று காங்கிரசு உறுப்பினர் திரு. கே. விநயகம் கேட்டிருந்த முதல் கேள்விக்கு, அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் பதிலளித்து, பல துணைக் கேள்விகளுக்கும் பதிலளித்துக் கொண்டிருந்தார் ; திரு. கே. விநயகம் துணைக் கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தார்.

"அவசரப்பட்டுத் தமிழை ஆட்சி மொழியாக்குவதால் பல குழப்பங்கள் ஏற்படுகிறது ; மெல்ல மெல்ல ஆட்சி மொழியாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?"

என்றும் திரு. விநயகம் கேட்டார் ; இதற்கு அமைச்சர் பின்வருமாறு பதிலளித்தார் :—

"கனம் விநயகம், முதலில், 'தமிழை ஆட்சிமொழியாக்குவது தீவிரப்படுத்தப்படுமா' என்று கேட்டுவிட்டு, அவரே இப்போது, 'தீவிரப்படுத்தினுல் குழப்பம் ஏற்படும்' என்று கூறுகிருர் "

என்று கூறிவிட்டு, தமிழை ஆட்சிமொழியாக்கும் நடவடிக்கைகள் பற்றி விளக்கமளித்தார்.

ஏழை தலையில் கைவைக்கும் மொரார்ஜியின் 'பட்ஜெட்'

புதுடில்லி, மார்ச் 2—

மொரார்ஜி தேசாய் அளித்துள்ள வரவு-செலவுத் திட்டத்தின் விளைவாக ஏழை எளிய மக்களுக்கு மிகவும் பயன்பட்டுவரும் அஞ்சல் அட்டை, உறை, உள்நாட்டு அஞ்சல் மடல் ஆகியவற்றின் விலைகள் கூடுதலாக்கப்பட்டிருக்கின்றன.

இதுவரை ஆறு காசாக இருந்துவந்த அஞ்சல் அட்டை 10 காசாகவும், 10 காசாக இருந்த உள்நாட்டு அஞ்சல் மடல் 15 காசாகவும், 15 காசாக இருந்துவந்த அஞ்சல் உறை 20 காசாகவும் உயர்த்தப்படும்.

பதிவுக் கடிதங்களுக்கான கட்டணமும் உயர்த்தப்படுகிறது.

வெளிநாட்டுக்கான அஞ்சல் கட்டணங்கள் உயர்த்தப்படுகின்றன.

இந்தக் கட்டண மாறுதலால் ஓராண்டில் கூடுதலாக ரூ. 24.70 கோடி கிடைக்கும்.

பத்திரிகைகளுக்காக அல்லாத தந்திகளுக்கு முதல் எட்டு சொற்களுக்கான தந்திக் கட்டணம் ரு. 1-லிருந்து ரூ. 1.20-க்கு உயர்த்தப்படும்.

வாழ்த்துத் தந்திகள், பத்திரிகைத் தந்திக் கட்டணமும் உயரும்.

வாழ்த்துத் தந்திக் கட்டணம் 80 காசிலிருந்து ஒரு ரூபாய்க்கு உயர்த்தப்படும்.

பத்திரிகைச் செய்திகள் கட்டணம் முதல் 50 சொற்களுக்கு 75 காசிலிருந்து ஒரு ரூபாய்க்கு உயர்த்தப்படும்.

பணவிடை மடல் கட்டணம் இப்பொழுது 10 ரூபாய்க்கு 15 காசாக இருப்பது ரூ. 200 வரை 10 ரூபாய்க்கு 20 காசு வீதமும் அத்தொகைக்கு மேல் கட்டணம் ரூ. 20-க்கு 30 காசாகவும் உயரும்.

'போஸ்டல் ஆர்டர்' கட்டணமும் அதிகரிக்கும்.

புத்தகம், 'சாம்பிள் பாக்கெட்' கட்டணம் 50 கிராமுக்கு 10 காசாக இருப்பது 15 காசாக உயரும்; அதற்குமேல் 25 கிராமுக்குக் கட்டணம் 5 காசாக இருப்பது 10 காசாக உயரும்.

அச்சிடப்பட்ட புத்தகங்கள் உள்ள பாக்கெட்டுகள், பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகள் கட்டணமும் உயரும்.

பார்சல்கள், 'எக்ஸ்பிரஸ்' டெலிவரி கட்டணங்களும் மாற்றப்படும்.

எக்ஸ்பிரஸ் டெலிவரிக் கட்டணம் 5 காசு அதிகரித்து 20 காசாகும்.

பதிவு செய்யப்படாத கடிதங்களுக்கு 'லேட்' கட்டணம் 10 காசிலிருந்து 15 காசுக்கு உயரும்.

பதிவு செய்யப்பட்ட கடிதங்களுக்கு அக்கட்டணம் 15 காசிலிருந்து 20 காசாகும்.

பிறகு அறிவிக்கப்படும் நாளிலிருந்து இந்தக் கட்டண மாறுதல்கள் செயலுக்கு வரும்.

பதிவுக் கட்டணம் 10 காசும் 'அக்னலட்ஜ்மெண்ட்' கட்டணம் 5 காசாகவும் உயரும்.

சாதாரண—எக்ஸ்பிரஸ் தந்திக் கட்டணங்கள், முதல் 8 சொற்களுக்கு முறையே 20, 40 காசாக உயரும். கூடுதல் சொல் ஒவ்வொன்றுக்கும் கட்டணம் இதுவரை உள்ளதுபோல் 10, 12 காசுகளாக இருக்கும்.

படைச் செலவு :

7 ஆண்டுகளில் 4 மடங்காக உயர்வு!

புதுடில்லி, மார்ச் 2—

1968—69-ல் இந்தியப் பாதுகாப்புச் செலவு ரூ. 1015 கோடியாக இருக்கும்; இத்தொகை, 1960—61-ல் செலவான தொகையைப்போல் நான்கு மடங்காகும்.

1961—62-ல்தான் சீனப் படையெடுப்பு நிகழ்ந்தது; அந்த ஆண்டு இராணுவச் செலவு ரூ. 312 கோடியாக இருந்தது; அத்தொகை, அதற்கு முந்திய ஆண்டைவிட ரூ 31 கோடி கூடுதலாகும்.

சீன ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து 1962—65-ல் ரூ. 473 கோடியாக உயர்ந்தது.

அடுத்து, ஆண்டுதோறும் செலவிடப்பட்ட பாதுகாப்புச் செலவு விபரம் :—

1963—64-ல் ரூ. 816 கோடி ;
1964—65-ல் ரூ. 865 கோடி ;
1965—66-ல் ரூ. 888 கோடி ;
1966—67-ல் ரூ 918 கோடி.

1967—68-ல் ரு 970 கோடியாக இருந்தது, வருகிற நிதியாண்டில் ரு 45 கோடி உயர்ந்துள்ளது.

வருகிற ஆண்டுகளிம் பாதுகாப்புச் செலவு அதிகரிப்பதற்கு முக்கியக் காரணம் அகவிலைப்படி உயர்வும், பெருமளவில் தளவாடங்களை மாற்றுவதற்காக ஏற்படும் செலவுமே ஆகும்.

அடுத்த ஆண்டு, எல்லைச் சாலைகள் அமைப்புக்காக மட்டும் ரு 48 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது; இது, முந்திய மதிப்பீடுகளைவிட ரூ. 5 கோடி உயர்வாகும்.

காங்கிரசு உறுப்பினரே கண்டிக்கிறார்!

மொரார்ஜி வரவு-செலவுத் திட்டம் பற்றி காங்கிரசு உறுப்பினரான திரு. கே. அனுமந்தையா கூறியதாவது :—

"அஞ்சல் கட்டணங்களையும் உயர்த்தியுள்ளது பெரிய ஏமாற்றத்துக்கு உள்ளாக்கி

வாங்கும் 'கோடி'களும் உயருகின்றன!

புதுடில்லி, மார்ச் 3—

இந்திய அரசின் பொதுக்கடன் பாக்கி நப்பு ஆண்டுமுடிவில் ரூ. 11,959.84 கோடியாக கோடியாக இருக்கும்; 1968—1969 முடிவில் ரூ. 13157.16 கோடியாகிவிடும்!

1968 மார்ச் 31-ஆம் நாளன்று இந்தியாவில் எழுப்பிய கடன் ரூ. 6,559.06 கோடி! வெளிநாடுகளில் ரூ. 4,400.78 கோடி!

1969 மார்ச் 31-ம் நாள் இந்தியாவில் எழுப்பிய கடன் ரூ. 6,931.85 கோடி ஆகிவிடும்! வெளிநாடுகளிடு வாங்கும் கடன் ரூ. 6,225.31 கோடி ஆகிவிடும்!

யிருக்கிறது. இது நிதியமைச்சரின் குற்றமல்ல; அஞ்சல் துறையின் திறமையற்ற நிர்வாகத்தையே எடுத்துக்காட்டுகிறது.

"சிக்கனமாக இயங்க இயலாத அஞ்சல் துறையின் நிர்வாகத் திறமையின்மைக்காக, பொதுமக்கள் அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது!

வரவு - செலவுத் திட்டம் பற்றி, எதிர்க் கட்சியினர் அனைவருமே கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஏழை மக்களின் மீது மேலும் சுமை ஏற்றப்பட்டிருப்பது குறித்துத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

தென்னேட்டி விசுவநாதன்

ஆந்திரத்தைச் சேர்ந்த சுயேச்சை உறுப்பினர் தென்னேட்டி விசுவநாதன் கூறியதாவது :—

"இந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் நடுத்தர மக்களும் குழந்தைகளும்கூடப் பாதிக்கப்படுவார்கள்.

"தொழிலதிபர்களுக்கும் நிதி அமைச்சருக்குமிடையே நடக்கும் உரையாடல்போல் இது அமைந்துள்ளது! மற்றவர்கள் இழப்பிலிருந்து அவர்கள் இலாபமடையப் பார்க்கிறார்கள்!"

கலப்புமணப் பரிசு

தமிழக அரசின் திட்டம் பற்றி அமைச்சர் சத்தியவாணிமுத்து

சென்னை, பிப். 28—

'தமிழ்நாட்டில் கலப்பு மணம் செய்துகொண்ட மணமக்களுக்குப் பரிசளிக்கும் திட்டம் உருவாக்கப்பட்டபின் 7 கலப்புத் திருமணங்கள் நடைபெற்றுள்ளன"

என்று, தமிழகச் சட்டமன்ற மேலவையில் அமைச்சர் சத்தியவாணிமுத்து கூறினர்.

"கலப்பு மணம் செய்துகொண்டவர்களுக்குப் பரிசளிக்கும் திட்டம், அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது; அதில் ஒரு முறை வகுக்கப்பட்டபின், கலப்பு மணம் செய்துகொண்டவர்களுக்குப் பரிசளிக்கப்படும்" என்றார் அமைச்சர்.

"சினிமாத் தொழிலையும், கொட்டகைகளையும் தேசியமயமாக்குத் உத்தேசம் உண்டா ?"

என்று காங்கிரசு உறுப்பினர் பெ. எத்திராஜ் கேட்டார்.

அமைச்சர் :—"அவ்வாறு உத்தேசம் எதுவுமில்லை; மற்ற மாநிலங்களில் கொட்டகைகள் தேசியமயமாக்கப்பட்டிருப்பதாக அரசுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது; அதுபற்றி நன்கு ஆராய்ந்த பின்னர் தமிழகத்தில் தேசியமயமாக்குவது பற்றிப் பரிசீலிக்கப்படும்."

"சினிமாக் கொட்டகைகளைவிட சினிமா ஸ்டூடியோக்களுக்கு நல்ல வருமானம் இருப்பதால், அவற்றைத் தேசியமயமாக்கும் திட்டம் எதுவும் உண்டா"?

என்று உறுப்பினர் கே. இராமதாஸ் கேட்டார்.

அமைச்சர் :—"தற்போது அந்தத் திட்டம் எதுவுமில்லை."

ஏற்றம்!

கடந்த 183 ஆண்டுகளுக்குப் பின் முதன் முறையாக 'இலண்டன் டைம்ஸ்' ஏடு, சென்ற ஞாயிறன்று பத்து இலட்சம் வாசகர்களின் கரங்களில் தவழ்ந்திருக்கிறது!

அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

மார்ச் 3 காலை 7-30 மணி: சீர்காழி—எஸ். எம். இந்து உயர்நிலைப் பள்ளியில் விளையாட்டு விழா பார்வையிடல்; 9-மணி: சீர்காழி தமிழக மாநில உடற்பயிற்சிக் கல்வி மாநாட்டில் கலந்துகொள்ளல்; 10-30 மணி: சீர்காழி சியாமளா பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத் திறப்பும் ஆண்டு விழாவும்: 11-30 மணி: சீர்காழி கே. எம். எம். உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழா; பிற்பகல் 2-30 மணி: திருவாஞ்சியம்—ஆலய விருந்தினர் இல்லம் திறப்பு; மாலை 4-30 மணி: நன்னிலம் — அரசிதழ் பதிவிலா அலுவலர் ஒன்றியக் கட்டடத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்களின் படத் திறப்பும், தமிழக அரசு கடைநிலை ஊழியர் சங்கக் கட்டட அடிக்கல் நாட்டலும், கிராம அலுவலர் சங்கக் கட்டட அடிக்கல் நாட்டலும்; 5-மணி: ஏனங்குடி—பள்ளி ஆண்டு விழா; 5-30 மணி; வெளவாலடி—நீர்த் தொட்டி திறப்பு; 5-30 மணி: பள்ளிக் கட்டடத் திறப்பு; இரவு 7-30 மணி: திருக்கண்ணபுரம்—ஆலய விருந்ினர் இல்லத் திறப்பு.

14வது அகில இந்திய கைத்தறி வார பொருட்காட்சி

விசேஷ தள்ளுபடி

10%

3-3-68 முதல்
எல்லா கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி துணிகளுக்கும்

எல்லா "கோ-ஆப்டெக்ஸ்" விற்பனை நிலையங்களிலும்
பிரதம நெசவாளர் கூட்டுறவு
சங்கங்களிலும் கிடைக்கும்.

• நீங்கள் "கோ-ஆப்டெக்ஸ்" துணிகள் வாங்கும்போது
• மனதை கவரும் வண்ணங்கள்,
• ஆவலைத் தூண்டும் அழகு டிசைன்கள்,
• நெருங்கி இழைந்த நெசவு ஆகியவைகளை வாங்குகிறீர்கள்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
34/1-ஏ, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-8

ELEGANT

இறக்கம்!

கம்யூனிஸ்டுச் சிறுவிலிருந்து வெளிவரும் அதிகாரபூர்வமான ஏடுகளில் ஒன்றான 'ரெட் பிளாக்' (செங்கொடி) ஏடு, கடந்த மூன்று மாதங்களாக வெளிவரவில்லை.

தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் அந்த மாதம் இருமுறை இதழ், சீனத் தலைவர்களுக்குள்ளே இருக்கும் பிளவு மனப்பான்மை காரணமாக இந்த நிலைக்கு ஆளாகி இருக்கிறது!

திருமணம்

3—3—68 இரவு 8-30 மணியளவில், ஈரோடு நகர தி.மு.க. செயற்குழு உறுப்பினர் தோழர் ஏ. எஸ். தாவூதுக்கும்—செல்வி: நூர்ஜகானுக்கும் ஈரோடு பெரியார் நகர் மனறத்தில் திருமணம் நடைபெறும்; தலைவர் : ஜி. என். இராசு; வாழ்த்துரை வழங்குவோர் : எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.சி., மாணிக்கவாசம் எம்.எல்.ஏ, க. ர. நல்லசிவம் எம்.எல்.ஏ, திருவை ஆ. அண்ணாமலை, புலவர் தமிழன்பன், மு. இராமனுதன், மே. சி. துரைசாமி, கேரளசுந்தரம்.

மேட்டூரிலிருந்து 'அண்ணா தீச்சுடர்'

தொடர் ஓட்டம் மூலம் சென்னைக்கு வருகிறது

மார்ச் 6-ல் முதலமைச்சர் அண்ணாவிடம் அளிப்பு

"பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக அரசுப் பொறுப்பேற்ற முதலாவது ஆண்டு நிறைவினையொட்டி மேட்டூர் அணை வட்டார கழகச் சார்பு மன்றங்களைச் சார்ந்த 50 தோழர்கள், க. கு. சின்னசாமி தலைமையில் மேட்டூர் எம். ஜி. ஆர். மன்றத்திலிருந்து தீச்சுடர் ஏந்தி சென்னைக்குப் புறப்படுவர்.

"3—3—68 காலை 7-மணிக்கு ஏ. இராமலிங்கம் தலைமையிலும்—வி. கன்னியப்பன் பி.ஏ.பி.எல். முன்னிலையிலுல் சேலம் சிற்றுளி சுப்பிரமணியம், 'தமிழ்ச் சுடர்' தொடர் ஓட்டத்தைத் துவக்கி வைப்பார்; தொடர் ஓட்டத் தொண்டர்கள் அன்று மாலை 6-மணிக்கு கிருஷ்ணகிரி வந்தடைவர்.

"மீண்டும் 4—3—68 காலை 7-மணிக்கு கிருஷ்ணகிரி எம். ஜி. ஆர். மன்றத்திலிருந்து நகர தி.மு.க. செயலாளர் கே. சின்னசாமி தலைமையில்—எம் ஜி ஆர். மன்றச் செயலாளர் எஸ். ஆறுமுகம் முன்னிலையில் பி. திம்மராயர், 'தமிழ்ச் சுடர்' தொடர் ஓட்டத்தைத் துவக்கிவைப்பார்; அன்று மாலை 6-மணிக்கு வேலூர் வந்தடைவர்.

"மீண்டும் 5—3—68 காலை 7-மணிக்கு வேலூர் நகராட்சி மன்றத்தின் முன்பு நகர தி.மு.க. துணைச்செயலாளர் வி. ஏ. கண்ணன் தலைமையில் வேலூர் சட்டமன்ற உறுப்பினரும் நகராட்சித் தலைவருமான திரு. மா. பா. சாரதி எம்.எல்.ஏ. அவர்கள், சுடர் ஓட்டத்தைத் துவக்கிவைப்பார்: அன்று மாலை 5-மணிக்கு தொடர் ஓட்டத் தொண்டர்கள் திருப்பெரும்புதூர் அடைவார்கள்.

"மீண்டும் 6—3—68 காலை 8-மணிக்கு திருப்பெரும்புதூர் பஸ் நிலையத்திலிருந்து நகர தி.மு.க. செயலாளர் செந்தாமரை தலைமையில் ஊராட்சி மன்ற உறுப்பினர் ஏ. செயராமன், சுடர் தொடர் ஓட்டத்தைத் துவக்கி வைப்பார்; தொடர் ஓட்டத் தொண்டர்கள் பிற்பகல் 1-மணிக்கு தமிழகச் சட்டமன்றத்தின்முன் தி. மு. க. அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. — சேலம் மாவட்ட தி.மு.க. செயலாளர் ச். ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ.—புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். ஆகியோர் முன்னிலையில் — முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களிடம் தமிழ்ச் சுடரை அளிப்பார்கள்"

என்று ஓமலூர் வட்ட தி.மு.கழகச் செயலாளர் அ. பாலு அறிவிக்கிறார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நன்றாக—சற்றே சிரிக்கும் வகையில்—எடுத்துக் காட்டியிருக்கிறார்!

ஒரு ரூபாய் அரிசியைச் சாப்பிட்டதால் மக்கள், 'மஞ்சள் காமாலையினால் அவதிப்படுகின்றனர்' எனப் புகார் தந்திருக்கும் காங்கிரசு உறுப்பினர் ஒருவருக்கு—

"செய்தி உண்மைதான் என்றால், அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்: இருந்தாலும் உறுப்பினர், படி அரிசித் திட்டத்தைக் காமாலைக் கண்களுடன் நோக்காமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்"

எனச் செய்தித்துறை அமைச்சர் குறுக்கிட்டுக் கூறியிருப்பது, காங்கிரசுக்காரர்களின் பார்வைக்கு எந்த வண்ணக் கண்ணாடி பயன்பட்டிருக்கிறது என்பதனைத் தெளிவுபடுத்துகிறதல்லவா?

★

இலங்கை—பர்மாவிலிருந்து திரும்பிவரும் தமிழ் மக்களுக்குக் காங்கிரசு நிர்வாகம் காட்டிய மந்தப் போக்கினையும், இப்போதைய அரசு எடுக்கும் புனர் நிர்மாணத் திட்டங்களையும் ஒப்புவமை காட்டிப் பாராட்டுகள் வழங்கியிருக்கின்றனர் — **சௌந்தர பாண்டியனும், அக்கிலிராசுவும்!**

இராஜாஜி அவர்கள் தீவிரம் காட்டும் மதுவிலக்குக் கோட்பாட்டில் வேறுபட்டு சில சுதந்தரக் கட்சி உறுப்பினர்கள்பேசியிருக்கும்போது, மதுவிலக்கில் உறுதிகாட்டும் கழக அரசின் பெருமையை ஒளி படுத்திக் காட்டியிருக்கிறார் **இரா. மாணிக்க வாசகம்!**

கழக அரசின் குறுகியகாலச் சாதனைகள் ஏற்கனவே தமிழகத்தில் இடம் பெற்றிருப்பதனையும், இனி ஏற்பட இருப்பதனையும் நிதிநிலை அறிக்கை சுட்டிக்காட்டுவதாக இருப்பதனைப் பாராட்டியிருக்கிறார்கள்—**ஆ. துரையரசன், எம். கோபால் ஆகிய இருவரும்!**

'புதிய ஒதுக்கீடுகளைக் காணோமே?' என்று பார்வையைப் பதிக்காமல் கேட்கும் விமர்சனங்களுக்குத் தரும் பதிலாக — கல்விக்காக அதிகப்படித் தொகை செலவழிக்க இருப்பதனையும், புதிய கல்லூரிகள் துவங்க இருப்பதனையும் விளக்கியிருக்கிறார்—**சிவபெருமாள்!**

'பின்தங்கிய மாவட்டம்' என்ற வகையில், தொகுதித் தேவைகளில் அக்கறை காட்டிப் பேசியிருக்கிறார்—**டி. கே. சிறைமீட்டான்!** சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியுள்ள தொகைகளுக்காக மகிழ்வினைக் காட்டியிருக்கும் அவர், 'வைகைக் கால்வாய்த் திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டும்' எனக் கூறுவதற்கும் மறக்கவில்லை!

★

அரசியல்—கட்சி வேறுபாடுகளைக் கடந்த சில பொதுப் பிரச்சினைகள் உண்டு; அதில், 'தனிப்பட்ட கருத்து' என்ற விலக்கும் உண்டு—என்ற அனுபவ உண்மையினை, 'குதிரைப் பந்தயம்', 'மது ஒழிப்பு' ஆகிய பிரச்சினைகளில் கலந்துகொண்டு உரையாற்றியுள்ள சுதந்தரா—காங்கிரசுக் கட்சி உறுப்பினர்களின் மனப்போக்கு உணர்த்துகிறது!

இராஜாஜியின் கருத்துக்கு வேறுபட்டு, 'மதுவிலக்கு தேவையில்லை' எனப் பேசிய கிருஷ்ணசாமி கவுண்டரிடம், 'அப்படியென்றால், சுதந்தரக் கட்சியிலேயே ஒரு தீர்மானம் போட முடியுமா?' எனப் பொதுப்பணி அமைச்சர் கேட்க, 'சில பிரச்சினைகளில் சுதந்தரக் கட்சி, உறுப்பினர்களின் சொந்தக் கருத்துக்கு உரிமை தருகிறது' என ஹாண்டே விளக்கம் தந்திருக்கிறார்!

இடையில் காங்கிரசு உறுப்பினர் பொன்னப்ப நாடார், ஹாண்டேயின் குறுக்கீடு பற்றி மறுப்புத் தெரிவித்திருப்பதுடன், 'மதுவிலக்கு கூடாது' எனக் கூறும் கிருஷ்ணசாமி கவுண்டரின் கொள்கையை, மேலும் தெளிவுபடுத்துமாறு கோரியிருக்கிறார்!

மதுவிலக்குக் கொள்கையில், சுதந்தரக் கட்சியில் வேறுபாடு இருப்பதைப் பெரிதுபடுத்த வேண்டுமென்பது காங்கிரசு உறுப்பினரின் உள்நோக்கம்!

மற்ற கட்சி என்ன சொல்லுகிறது என்று தெரிந்து கொள்வதில் காங்கிரசு உறுப்பினர் காட்டியுள்ள அதே ஆர்வம், குதிரைப் பந்தயம் பற்றிய விவாதத்திலும் இருந்திருந்தால் பாராட்டியிருக்கலாம்—ஆனால் அங்கே மறைந்திருக்கிறதே!

"குதிரைப் பந்தயம் கூடாது என்பதுதான், கழகத்திற்கு எப்போதும் உள்ள கொள்கை; அதனை நிறைவேற்றுவதைச் சிறிது தள்ளி வைத்திருக்கிறதே தவிர, நிறுத்திவிடவில்லை" என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் தெளிவுபடுத்திவிட்டு, 'ஆனால், உங்கள் நிலை என்ன?' எனக் கேட்டதற்கு, மற்றொரு காங்கிரசு உறுப்பினர், 'நிதிநிலை அறிக்கையில் அதுபற்றி ஒன்றும் இல்லை; எனவே, நானும் அதுபற்றி ஏதும் சொல்வதற்கில்லை' என்றுதான் 'நழுவி' இருக்கிறாரே தவிர, தனது கொள்கையையோ அல்லது கட்சியின் கொள்கையையோ தெளிவாகக் கூறாதது, குறிப்பிடத்தக்கது!

கைத்தறி பொருட்காட்சி

34, பாந்தியன் சாலை — எழும்பூர் — சென்னை-8.

விசேடத் தள்ளுபடி 10 காசுகள்

நிகழ்ச்சி நிரல்

3—3—1968 ஞாயிறு

மாலை 6-05 மணி		கைத்தறி வார விழாவைத் தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை எம்.ஏ. அவர்கள் ஆரம்பித்துவைப்பார்.
	தலைவர் :	திரு. எம். ஏ. மாணிக்கவேலு பி.ஏ.பி.எல்., தலைவர், சென்னை மேல் சட்டசபை.
	கண்காட்சித் திறப்பாளர் :	திரு. ஆர். கனகசபை எம்.எல்.ஏ., தலைவர், சென்னை இராஜ்ய கூட்டுறவு பாங்கு லிமிடெட்.
மாலை 7-00 மணி	நாடகம் :	'கண்மணி' (சமூக நாடகம்)—எம்.எஸ்.டி. நாடகமன்றம்

4—3—1968 திங்கள்

மாலை 6-00 மணி	தலைவர் :	திரு. எஸ். மாதவன் பி.காம்., பி.எல்., சட்டம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.
	பேச்சாளர் :	திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் எம்.எல்.ஏ.
மாலை 7-00 மணி	நாடகம் :	'குன்றுடையான்'—நவசக்தி நாடக சபா.

5—3—1968 செவ்வாய் — பட்டு தினம்

மாலை 6-00 மணி	தலைவர் :	திரு. கே. ஏ. மதியழகன் பி.ஏ., உணவு மற்றும் ரெவினியூத்துறை அமைச்சர்.
	பேச்சாளர் :	திரு. வி. கே. சி. நடராசன் ஐ.ஏ.எஸ். மாநில கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்.
மாலை 7-00 மணி	நாடகம் :	'நீதி நிலைத்தது'—உஷா கிரியேஷன்ஸ்.

6—3—1968 புதன்

மாலை 6-00 மணி	தலைவர் :	திரு. ஏ. கோவிந்தசாமி, வேளாண்மை அமைச்சர்
	பேச்சாளர் :	திரு. முத்து ராஜாக்கண்ணனார், எம்.ஏ., பி.ஓ.எல்., முதல்வர், அரசினர் கலைக் கல்லூரி, சென்னை.
மாலை 7-00 மணி	நாடகம் :	'தெய்வமாகி நின்றாள்'—ஸ்டேஜ் மாயா.

கண்காட்சி நேரம் தினசரி மாலை 3 மணியிலிருந்து 10 மணி வரை — அனுமதி இலவசம்

நிலச் சீர்திருத்தச் சட்டம் வருகிறது

சட்டமன்றத்தில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் அறிவிப்பு

சென்னை, மார்ச் 2—

"நிலச் சீர்திருத்தம் குறித்து அடங்கல் சட்டம் ஒன்றை இயற்றும் யோசனை பரிசீலனையில் இருந்துவருகிறது"

என, வருவாய்த் துறை அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் இன்று சட்டமன்றக் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அறிவித்தார்.

"தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், திருச்சி கையேர்—மாட்டேர் வாரச் சட்டம், அறுபது—நாற்பது வாரச் சட்டம், மற்றும் குடியானவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுவதைத் தடுப்பது, உழவர்களுக்குக் கடன் வசதி அளிப்பது போன்றவற்றை உள்ளடக்கி இச்சட்டம் விரிவான முறையில் கொண்டுவரப்படும்" என்று அவர் கூறினார்.

துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் மேலும் கூறியதாவது:—

"ஏற்கனவே இந்த மாநிலத்தில் கொண்டுவரப்பட்ட நில உச்சவரம்புச் சட்டம், 'மிச்ச வரம்புச் சட்டம்' என்று சொல்லும்படியாக ஆகிவிட்டதால், அதனையெல்லாம் மனத்தில் கொண்டு புதிய சட்டம் உருவாக்கப்படும்.

மூன்றரைக்கோடி மக்கள் வாழும் இந்த மாநிலத்தில், 60 இலட்சம் பேர் பட்டாதார்களாக இருக்கிறார்கள்; 45 இலட்சம் புன்செய்ப் பட்டாக்களும், 15 இலட்சம் நன்செய்ப் பட்டாக்களுமாக இருக்கின்றன.

"முன்பு உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட நேரத்தில் நிலம் பிரிக்கப்பட்டு பெரிய நிலப்பிரபுக்கள் தப்பித்துக்கொள்ள வழிசெய்யப்பட்டுவிட்டது.

"கோயில், மடம் ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்டுள்ள விதிவிலக்குப் பற்றியும், தோப்பு, மேய்ச்சல் காடு முதலியவற்றிற்கு அளிக்கப்பட்டுள்ள விதிவிலக்குப் பற்றியும், மற்றும் பல்வேறு அம்சங்களும் விரிவாக ஆராயப்பட்டு, புதிய சட்டத்தை உருவாக்கும் வாய்ப்பும் உரிமையும் இந்த மன்றத்திற்கு உண்டு. எல்லா அம்சங்களும் ஆராயப்பட்ட பின்புதான்—அந்த அடிப்படையில்தான் சட்டம் இறுதி வடிவம் பெறும்."

தியாகராயநகர்ப் பகுதி சிரணியினருக்கு!

சென்னை 93-வது வட்டம் தர்மாபுரம் பகுதியில் சாலை அமைப்புப் பணி மேற்கொள்ளப்படவிருப்பதால், 3—3—68 காலை 8-மணிக்கு தியாகராயநகர்ப் பகுதிச் சிரணித் தொண்டர்கள், பாட்ஜுடன் மேற்குறிப்பிட்ட இடத்துககு வந்து சேருமாறு பகுதிச் சிரணித் தலைவர் சுந்தரம் கேட்டுக்கொள்கிறார்.

குழுக் கூட்டம்

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பல்வேறு துறைகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் சங்கம் ஒன்று அமைப்பது குறித்து, 3—3—68 மாலை 5-மணிக்கு, டிமலஸ் ரோடு, 110-எண்ணுள்ள கட்டிடத்தில் தோழர் எஸ். இராகவானந்தம் தலைமையில் நடைபெறும்; சமூகத் தோழர்களும், ஆதரவாளர்களும் கலந்து கொள்ளுமாறு சென்னை மாவட்டப் பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் செயலாளர் கே. சுப்பிரமணி கேட்டுக்கொள்கிறார்.

அ. பொன்னம்பலனார் இரங்கற் கூட்டம்

வேலூர் நகரத் தன்மதிப்பு இயக்கச் சார்பில் அ. பொன்னம்பலனார் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் பொதுக்கூட்டம் 3—3—68 மாலை 6-மணிக்கு டவுன் ஹாலில் நடைபெறும்; திரு. சி. எம். சுந்தரமூர்த்தி தலைமையில் தோழர்கள் சோ. இலட்சுமிரதன் பாரதியார், எஸ். டி. விவேகி, மா. பா. சாரதி எம்.எல்.ஏ., தோப்பூர் திருவேங்கடம், பி. டி. சம்பந்தம், இரா. செந்தாமரை, மற்றும் பலர் பேசுவர்.

ரோஜா பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் இந்தி

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டிகள், மராத்தியர்களின் இந்தி மோகத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்!

காந்தியார் விருப்பப்படி இந்தி, இந்தியர்களை இணைக்க உதவாவிட்டாலும், இந்தி எதிர்ப்பு உணர்ச்சி நாடெங்கிலும் ஒரு புதிய விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்துள்ளதாகத் தெரிகிறது.

அறிஞர் அண்ணா உடல்நிலை

சென்னை, மார்ச் 2—

மீண்டும் உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் உடல் நிலை தேறி வருகிறது.

'எக்ஸ்-ரே' எடுக்கப்பட்டு, மருத்துவர்கள் சிகிச்சையளித்து வருகின்றனர்.

மார்ச் 6: தமிழகம் மறுமலர்ச்சி கண்ட நாள்!

அண்ணா ஆட்சியின் மாட்சியினை நாடெங்கும் எடுத்துக்கூறுவோம் -- மக்கள் ஆதரவைத் திரட்டுவோம்!

மாவட்ட - வட்ட - கிளைக் கழகங்கட்குத் தலைமைக் கழகம் வேண்டுகோள்

1967-ஆம் ஆண்டு மார்ச் 6-ஆம் நாள் நம் தமிழகத்தின் அரசியல் வானில் ஒளி வீசி, ஏழை -- நடுத்தர மக்களின் அன்றாட வாழ்வில் மறுமலர்ச்சி காணப்பெற்றது. அதன் அடிப்படையில் நாட்டின் பல்வேறு துறைகளில் நல்வாழ்வும் வளர்ச்சியும் பெற்றுவருவதை நாடே பாராட்டுகிறது -- போற்றுகிறது -- வாழ்த்துகிறது!

எனவே, கழக அரசு கடந்த ஓராண்டுக் காலத்தில் ஆற்றியுள்ள அரிய சாதனைகளை, மார்ச் 6-ஆம் நாளன்று நாடெங்கிலுமுள்ள மாவட்ட— வட்ட —கிளைக் கழகங்களும், சார்பு மன்றங்களும், துணை அமைப்புகளும் பொதுக்கூட்டங்களின் வாயிலாக விளக்கிக்கூறி, மேலும் மக்களின் ஆதரவைத் திரட்டித்தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்'
சென்னை-13
27—2—68

என். வி. நடராசன்,
அமைப்புச்செயலாளர், தலைமைக்கழகம் (தி.மு.க)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.